## திருக்கோவிலூர் நகரம்

**அமைப்பாளர் :** வெ.நவநீதகிஷ்ணன், 30/9, கிழக்குத் தெரு, திருக்கோவிலூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) அ.ராமு, 61, தாசார்புரம், திருக்கோவிலூர், விழுப்புரம். (2) செ.கலைச்செல்வன், 7, மந்தக்கரை வீதி, திருக்கோவிலூர், விழுப்புரம். (3) ஏ.வெங்கடேசன், தங்கவேல் மந்தக்கரை வீதி, திருக்கோவிலூர். (4) மா.சல்மான்கான், 141/58–ஏ, தெற்குத் தெரு, சந்தப்பேட்டை, திருக்கோவிலூர், விழுப்புரம். (5) சு.சஞ்சய், சந்தப்பேட்டை ஆசனூர் சாலை, திருக்கோவிலூர், விழுப்புரம்.

## கோட்டாங்குப்பம் நகரம்

**அமைப்பாளர் :** ஏ.வசந்தராஜ், 1, தென்றல் நகர், கி.கடற்கரை சாலை, வானூர், விழுப்புரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஆ.துளசிங்கம், 14, ஐயனார் கோயில் தெரு, பெரிய முதலியார்சாவடி, வானூர், விழுப்புரம். (2) ம.தினேஷ், 55, கன்னியம்மாள் கோயில் தெரு, சின்னக் கோட்டக்குப்பம், வானுர், விழுப்புரம். (3) மு.மன்சூர், 43, பழைய பட்டணப் பாதை, கோட்டக்குப்பம், வானூர், விழுப்புரம். (4) மு.அப்துல் பகத், 54, லைலத்துல் வீதி, இந்திரா நகர், கோட்டங்குப்பம், வானூர், விழுப்புரம். (5) ச.பழனி, 18/48, காயிதே மில்லத் வீதி, இந்திரா நகர், கோட்டக்குப்பம், வானூர், விழுப்புரம். (6) மா.பிரேம்குமார், 7, அக்பர் வீதி, புறாத்தோப்பு, கோட்டக்குப்பம், வானூர், விழுப்புரம்.

## விழுப்புரம் நகரம்

**அமைப்பாளர் :** செ.மணிகண்டன், 24, ஜி.ஆர்.பி.தெரு, விழுப்புரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) எஸ்.வெற்றிவேல், 28, பெரியார் தெரு, கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம். (2) எஸ்.சித்திக் அலி, 1–ஏ, ராஜகோபால் தெரு, விழுப்புரம். (3) பி.கே.சங்கர், 197, திருவள்ளுவர் தெரு, சீனுவாசா நகர், சாலாமேடு, விழுப்புரம். (4) கோ.மோகன்ராஜ், 10, வண்டிமேடு, விழுப்புரம். (5) ஆர்.பிரபு, 16/13, வெங்கட்கிருஷ்ணன் தெரு, வி.மருதூர், விழுப்புரம். (6) மு.சிவமுருகன், 8, மணிமேகலைத் தெரு, கிழக்குப் பாண்டி ரோடு, விழுப்புரம். (7) எம்.புஷ்பராஜ், 14/34, வரதப்பன் தோப்பு, விழுப்புரம். (8) ரா.சுரேஷ், துரைராஜ் நகர், சாலாமேடு, விழுப்புரம்.

## அரகண்டநல்லூர் பேரூர்

**அமைப்பாளர் :** ச.தினகரன், 27, மாரியம்மன் கோயில் தெரு, அரகண்டநல்லூர், விழுப்புரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) அ.விக்னேஷ், 52, கண்டாச்சிபுரம் ரோடு, அரகண்டநல்லூர், விழுப்புரம். (2) ப.பொன்னழகன், 9–ஏ, விநாயகர் கோயில் தெரு, அரகண்டநல்லூர், விழுப்புரம். (3) மோ.முகேஷ், 4/129, நேருஜி தெரு, அரகண்டநல்லூர். விழுப்புரம்.

## வளவனூர் பேரூர்

**அமைப்பாளர் :** சூ.முருகன், 86, தெற்கு அக்ரஹாரம், வளவனூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.பச்சையப்பன், 14/ஏ, ஏரிக்கரை மேட்டுத் தெரு, வளவனூர், விழுப்புரம். (2) சி.சுரேந்தர், 10/14 தோட்டக்காரத் தெரு, குமாரகுப்பம், வளவனூர், விழுப்புரம். (3) ரா.டேவிட் ராஜா, 235, கிழக்கு பாண்டிச் சாலை, வளவனூர், விழுப்புரம்.

## திருவெண்ணெய்நல்லூர் பேரூர்

**அமைப்பாளர் :** பெ.சுரேஷ், 22, மேல் பாதி தெரு, காந்தி நகர், திருவெண்ணெய்நல்லூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ச.மணிகண்டன், மேற்குத் தெரு, திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம். (2) தா.சதாம் காதர் உசேன், 4, பெரியார் தெரு, திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம். (3) வெ.ஜெகநாதன், பெருமாள் கோயில் தெரு, திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம். (4) வி.சுலைமான், 30, கருமார மேஸ்திரி தெரு, திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம்.

## விக்கிரவாண்டி பேரூர்

**அமைப்பாளர் :** இரா.கார்த்திக், 12/2, வீரன் கோயில் தெரு, விக்கிரவாண்டி, விழுப்புரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.சிவா (எ) சிவசந்திரன், 4, பழைய காவல் நிலைய வீதி, விக்கிரவாண்டி, விழுப்புரம். (2) ரா.உதயநிதி பாலு (எ) பாலசுப்பிரமணியன், செட்டீஸ்வரன் கோயில் தெரு விக்கிரவாண்டி, விழுப்புரம். (3) வீர.ராஜசேகர், ஒத்தவாடித் தெரு, விக்கிரவாண்டி, விழுப்புரம். (4) ஆ.இளவரசன், 44, கக்கன் நகர், விக்கிரவாண்டி, விழுப்புரம். (5) ஞா.நீலநாராயணன், ரெட்டிகுப்பம் சாலை, விக்கிரவாண்டி, விழுப்புரம்.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 11–01–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

---

### விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாநிலக் கட்சியாக அறிவிப்பு!

# திருமாவளவனின் உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரம்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை, ஜன. 12-**

**“விடுதலைச் சிறுத்தை கள் கட்சியை மாநிலக் கட்சியாக அங்கீகரித்து தேர்தல் ஆணையம் அறிவித்திருப்பது திருமாவளவனின் உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரம்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.**

இது குறித்து கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



“விடுதலைச் சிறுத்தைகள் கட்சியை அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சியாகத் தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வமாக அறிவித்திருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

அன்புச் சகோதரர் திருமாவளவன் அவர்களின் உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரமாக இதை எண்ணிப் பாராட்டுகிறேன்.”

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

### தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற முதல்வர் உறுதி!

# நெல் குவிண்டாலுக்கு ரூ.2500 வழங்கப்படும்!

### சட்டப்பேரவையில் அமைச்சர் அர. சக்கரபாணி எடப்பாடிக்கு பதில்!

**சென்னை, ஜன.12 -**

**“எங்கள் முதல்வர் அவர்கள் அளித்துள்ள வாக்குறுதிப்படி நெல் குவிண்டா லுக்கு ரூ.2500 வழங்கப்படும்” என்று உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடிக்குப் பதிலடி கொடுத்தார்.**

இது குறித்து சட்டப் பேரவையில் அமைச்சர் அர.சக்கர பாணி அவர்கள் கூறியதாவது:-



எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நெல் குவிண்டாலுக்கு 2,500 ரூபாய் வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். நாங்கள், எங்களுடைய தேர்தல் அறிக்கையில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால், நெல் குவிண்டாலுக்கு 2,500 ரூபாய் வழங்கப்படும் என்று சொன்னோம். உங்கள் ஆட்சிக் காலத்தில் 1,960 ரூபாய் சன்ன இரகத்திற்கு இருந்தது. இப்போது, கடந்த செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் 2,450 ரூபாய் நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டே, வருகின்ற செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் நெல் குவிண்டாலுக்கு 2,500 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றப் போகிறோம். எங்களுக்கு ஐந்தாண்டு காலம் மக்கள் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள்.

எனவே, சொன்ன வாக்குறுதியைக் கண்டிப்பாக நிறைவேற்றுவோம். அதைவிட,

2,500 ரூபாய்க்கு மேலாக கொடுப்பதற்கும் வாய்ப்பிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர. சக்கரபாணி அவர்கள் கூறினார்.

---

### ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல்:

# தி.மு.க.வின் வெற்றிக்குப் பாடுபடுவோம்!

### இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிவிப்பு!

சென்னை, ஜன. 12-

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளரின் வெற்றிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பாடுபடும் என்று இக்கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர், ஈ.வெ.கி.ச.இளங்கோவன் மறைவு காரணமாக ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் ஆதரவுடன் இடைத் தேர்தலில் போட்டியிடும்தி.மு.கழகம் வேட்பாளராக வி.சி. சந்திரகுமார் அறிவிக்கப்பட்டுள்ளார்.

பிப்ரவரி 5 ஆம் தேதி நடைபெறும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளரின் வி.சி.சந்திரகுமார் மாபெரும் வெற்றிக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி பாடுபடும் என்பதை மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு இரா.முத்தரசன் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.1.2025) சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் தின விழாவினையொட்டி அமைக்கப்பட்டுள்ள அயலக தமிழ்ச்சங்கங்கள், சுற்றுலா, மருத்துவம், தொழில் அரங்கங்கள் உள்ளடக்கிய கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்த நிகழ்வின்போது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர். கலாநிதி வீராசாமி, எம்.எம்.அப்துல்லா, அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி, ஐ.ஓ.எப்.எஸ்., உள்பட அயலகத் தமிழர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### பாலியல் குற்றம் புரியும் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை – சட்டத்திருத்தம்!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்த 2 சட்ட முன்வடிவுகள்!

### பேரவையில் நிறைவேறின!

சென்னை, ஜன. 12-

தமிழ்நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தை களுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் ஈடுபட்டால் அதிகபட்சமாக மரண தண்டனை விதிக்கும் வகையில் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பேரவையில் நேற்று முதலமைச்சர் கொண்டு வந்த சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்கும் வகையில் சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 2 சட்ட முன்வடிவுகளை நேற்று முன்தினம் தாக்கல் செய்தார். இந்த சட்டத்திருத்தப்படி, பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு 14 ஆண்டுகளுக்கு குறையாத கடுங்காவல் தண்டனையும், காவல்துறை ஊழியர் பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபட்டால் குறைந்த பட்சம் 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதிக்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும்,12 வயதுக்குட்பட்ட சிறுமி மீது பாலியல் வன்புணர்ச்சி குற்றங்களுக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை என்பதை மாற்றி மரண தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்திருத்தம் செய்யப்பட்டது.

கூட்டு வன்புணர்ச்சி மற்றும் மீண்டும் மீண்டும் பாலியல் குற்றம் இழைத்தவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் வகையிலும், அமிலம் முதலிய வற்றை பயன்படுத்துவதன் மூலம் தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவித்தால் மரண தண்டனை விதிக்கும் வகையிலும் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டுவரப்பட்ட 2 சட்ட முன்வடிவுகளும் சட்டப்பேரவையில் நேற்று நிறைவேறியது.

---

### அ.தி.மு.க. ஆட்சியின் போது அரங்கேறிய பொள்ளாச்சி சம்பவம்:

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதுதான் உண்மை!

### ஆவணங்களை ஆய்வு செய்தபின் சபாநாயகர் அறிவிப்பு

சென்னை, ஜன. 12-

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அவர்கள் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சியில் நடந்த பாலியல் குற்றத்தில் பல பெண்கள் பாதிக்கப்பட்டனர் எனத் தெரிவித்தார்.

இந்த குற்றத்தின் மீது அ.தி.மு.க. ஆட்சியில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, வழக்கு சிபிஐயிடம் சென்ற பிறகுதான் உண்மை வெளியே வந்தது என்றும் கூறிய அவர், பாதிக்கப்பட்டவரின் சகோதரர் காவல் நிலையத்தில் புகார் அளித்தும் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும் குற்றம்சாட்டிய முதலமைச்சர் பொள்ளாச்சி சம்பவம் அ.தி.மு.க. பிரமுகர்களால் நடத்தப்பட்டது என்று சிபிஐ தெளிவாக தெரிவித்ததாகவும் கூறினார்.

இது தொடர்பான ஆவணங்களை தான் தருவதாகவும், அதேபோல எதிர்க்கட்சித் தலைவர் அவருடைய ஆதாரங்களை தரட்டும், இரண்டு ஆவணங்களையும் சபாநாயகர் சரிபார்த்து தீர்ப்பு வழங்கட்டும் என்றும் முதலமைச்சர் கூறியிருந்தார்.



இந்நிலையில், இவ்விவகாரம் குறித்து பேசிய சபாநாயகர் அப்பாவு அவர்கள், முதலமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும் தங்களின் ஆவணங்களை வழங்கியதாகவும், அவற்றை ஆய்வு செய்ததில் முதலமைச்சர் சொன்னதில் உண்மை அப்படியே உள்ளதாகவும் கூறினார். அ.தி.மு.க.வினர் கொடுத்த தகவலில் 12 தேதி சம்பவம் நடந்துள்ளது 19ஆம் தேதி எஸ்பி அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது ஆனால் 24 ஆம் தேதி தான் வழக்குப்பதிவு செய்யப்பட்டதாகவும் சபாநாயகர் தெரிவித்தார். மேலும் பேரவைத் தலைவர் கூறுகையில் இரண்டு பேரும் அளித்த ஆதாரங்களைப் பார்த்தேன்.

முதலமைச்சர் கூறியது உண்மை நான் சொல்கின்ற தீர்ப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். அவ்வளவுதான் தீர்ப்பு. (குறுக்கீடு) இல்லை, இல்லை; நீங்கள், என்னைப் பேசுவதற்கே விடமாட்டேன் என்கிறீர்களே! (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஆதாரம் கொடுத்திருப்பதில், 19 ஆம் தேதி பாதிக்கப்பட்ட பெண்ணினுடைய சகோதரர் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் மனு கொடுக்கின்றார். அவர், அந்த புகார் மனுவை DSP அவர்களைப் பார்த்துக் கொடுங்கள் என்று கூறுகிறார். அவர்களால் 22 ஆம் தேதி தான் DSP அவர்களைப் பார்க்க முடிகிறது. அவர், பொள்ளாச்சி (East) காவல் நிலையத்திற்குச் சென்று புகார் அளியுங்கள் என்று கூறுகிறார். அதற்குப் பிறகுதான், 24 ஆம் தேதி பாதிக்கப்பட்ட பெண்ணிடம் ஒரு கையெழுத்து பெறப்பட்டு, FIR பதிவு செய்யப்பட்டுள்ளது. அதுதான் உண்மையேதவிர, அதில் வேறொன்றும் இல்லை. நீங்கள், என்னுடைய அறையில் வந்து, இதை இத்துடன் முடித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதால், அதையே தீர்ப்பாக வழங்குகிறேன். அத்துடன் முடித்துக்கொள்ளலாம். நடந்த உண்மை இவ்வளவுதான்.

இவ்வாறு பேரவைத் தலைவர் தீர்ப்பு அறிவித்தார்.




தமிழர் திருநாளாம் தைப் பொங்கலை முன்னிட்டு நாகர்கோவில் மாநகராட்சியில் பணிபுரியும் 1,371 நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடையுடன் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நாகர்கோவில் மாநகராட்சி, கலைவாணர் மாளிகை வளாகத்தில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சியில் பணிபுரியும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் உட்பட 831 பெண் பணியாளர்களுக்கு சேலை, 540 ஆண் பணியாளர்களுக்கு வேட்டி மற்றும் சட்டையும், மொத்தமாக 1,371 பணியாளர்களுக்கு பொங்கல் பானை, அகப்பை மற்றும் இரண்டு கரும்பு வீதம் பொங்கல் பரிசு தொகுப்பினை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தனது சொந்த செலவில் வழங்கினார்.